**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.92/2014**

**DEPOSITION OF WITNESS FOR PW.2**

| | | | |
|---|---|---|---|
| **Name :** | SONU K KANJIRATHUMMOOTTIL | **Caste:** | |
| **Father's Name:** | **KUNJUMON K.S.** | **Calling:** | **BRANCH MANAGER AT SOUTH INDIAN BANK, GUDIYATHAM** |
| **Village:** | **THRIKODIHANAM** | **Religion:** | **CHRISITIAN** |
| **Taluk:** | **CHANGANACHERRY, KERALA** | **Age:** | **29** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2019

## முதல் விசாரணை

நான் சௌத் இந்தியன் வங்கி குடியாத்தம் கிளையில் மேலாளராக கடந்த 4 மாதங்களாக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின்பேரில் இன்று சாட்சியம் அளிக்க நீதிமன்றம் வந்துள்ளேன். வங்கி ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நாராயணசாமி மகன் ஜெயபால் என்பவர் எங்களது வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். எங்கள் வங்கியில் தீனதயாளன் என்பவருக்கு சேமிப்பு மற்றும் **Over Draft Account** ம் உள்ளது. அந்த சேமிப்பு கணக்கு எண்.54-860 ஆகும். **Over Draft Account No.82-3** ஆகும். அவர் எங்கள் வங்கியில் பணிபுரிந்தார். தற்போது பணியில் இல்லை. அவர் தன்னிச்சையாக பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டார். மேற்படி 2 கணக்கிற்கும் காசோலை வசதி உண்டு. என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.3 காசோலை எங்களது வங்கியிலிருந்து மேற்படி நபருக்கு பயன்பாட்டிற்காக கொடுக்கப்பட்டதாகும். மேற்படி காசோலையின் எண். 442353 ஆகும். மேற்படி காசோலை 02.04.2013ம் தேதி ரூபாய் 1 இலட்சத்திற்கு **N.N.**ஜெயபால் என்பவருக்கு தீனதயாளன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த காசோலை அவரது சேமிப்பு வங்கிக்கணக்கு சம்மந்தபட்ட காசோலையாகும். மேற்படி காசோலை வங்கிக்கணக்கில் போதிய பணம் இல்லையென்று திருப்பப்பட்டுள்ளது. அந்த குறிப்பாணை பு.த.சா.ஆ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.6 ஆன காசோலை எங்களது வங்கியால் தீனதயாளன் என்பவருக்கு **Over Draft Account** க்கு கொடுக்கப்பட்ட காசோலையாகும். மேற்படி காசோலை 26.04.2013ம் தேதி ரூபாய் 1 இலட்சத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி காசோலை **N.N.**ஜெயபால் என்பவருக்கு தீனதயாளன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி காசோலை கணக்கில் போதிய பணம் இல்லையென்ற காரணத்தினால் திருப்பம் செய்யப்பட்டுள்ளது. அந்த குறிப்பாணை பு.த.சா.ஆ.7 ஆக ஏற்கனவே குறியிடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ள முதல் காசோலையை திருப்பப்பட்டபோது குறிப்பாணையுடன் ஒரு கடிதம் எங்களது வங்கியால் கொடுக்கப்பட்டுள்ளது அது ஏற்கனவே பு.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று 2வது காசோலை திருப்பப்பட்டபோதும் குறிப்பாணையுடன் ஒரு கடிதம் எங்களது வங்கியால் கொடுக்கப்பட்டுள்ளது அது ஏற்கனவே பு.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தீனதயாளன் என்பவரது சேமிப்பு கணக்கு சம்மந்தபட்ட **Account Statement and Over Draft Account Statement** ஆகியவற்றை கொண்டுவந்துள்ளேன் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை மேற்படி **Account Statement** முறையே பு.த.சா.ஆ.13 மற்றும் பு.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி இரண்டு கணக்குகளுக்கும் உண்டான **Account Statement**களில் 01.01.2013 முதல் 31.12.2013 வரையிலான கணக்கு நடவடிக்கைகள் கண்டுள்ளது. சேமிப்பு கணக்கு **Account Statement** ல் 02.04.2013ம் தேதியன்று ரூபாய் 443.48 பைசாக்கள் இருந்துள்ளது. காசோலை தொகைக்குண்டான ரூபாய் 1 இலட்சம் அன்றைய தேதியில்

*சேமிப்பு வங்கிக்கணக்கில் இல்லை. அதேபோன்று* **Over Draft Account** *ல் 26.04.2013ம் தேதியன்று தீனதயாள்* **OD** *தொகையான 3,95,939.47 பைசா தொகை எடுத்துள்ளார் மீதம் அவர்* **OD** *யாக 4,061/- ரூபாய் மட்டுமே எடுக்கக்கூடிய சூழ்நிலையில் இருந்துள்ளது. ஆகையினால் 1,00,000/- தொகைக்குண்டான காசோலைக்கான பணம் கணக்கில் இல்லை.*

## குறிப்பு

*புகார்தாரர் வழக்கறிஞர் முதல் விசாரணையின்போது புகார்தாரரும் மேற்படி வங்கியில் கணக்கு வைத்துள்ளதாகவும் அதே வங்கியில் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளதைப்பற்றி கேட்டபோது சாட்சி அது சம்மந்தபட்ட ஆவணங்கள் கொண்டுவரவில்லை என்றும் ஆனால் வாய்தா கொடுக்கப்படும் பட்சத்தில் அனைத்து ஆவணங்களையும் கொண்டுவர சம்மதித்தார், ஆகையினால் வாய்தா ஒத்திவைக்கப்பட்டது.*